# அக்டோபர் – 07 – முதல் சனி

### தூய செபமாலை அன்னை

### ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்கின்றார்: திபா. 69:33

## முதல் வாசகம் : பாரூக் : 4 : 5 – 12, 27 - 29

இஸ்ரயேலின் புகழை நிலைநாட்டும் என் மக்களே, வீறுகொள்வீர். நீங்கள் வேற்றினத்தாரிடம் விற்கப்பட்டது உங்கள் அழிவிற்காக அன்று நீங்கள் கடவுளுக்குச் சினமூட்டியதால்தான் பகைவரிடம் ஒப்படைக்கப்பட்டீர்கள். கடவுளை விடுத்துப் பேய்களுக்குப் பலியிட்டதால் உங்களைப் படைத்தவருக்குச் சினமூட்டினீர்கள். உங்களைப் பேணிக் காத்துவந்த என்றுமுள கடவுளை மறந்தீர்கள் உங்களை ஊட்டிவளர்த்த எருசலேமை வருத்தினீர்கள் கடவுளின் சினம் உங்கள்மீது வரக்கண்டு எருசலேம் கூறியது "சீயோன் அண்டை நாட்டவரே, கேளுங்கள் கடவுள் எனக்குப் பெருந்துயர் அனுப்பியுள்ளார். ஏனெனில் என்றுமுள்ளவர் என் புதல்வர், புதல்வியர் மீது சுமத்திய அடிமைத்தனத்தை நான் கண்டேன். மகிழ்ச்சியோடு நான் அவர்களைப் பேணி வளர்த்தேன் ஆனால் அழுகையோடும் துயரத்தோடும் அனுப்பி வைத்தேன். நானோ கைம்பெண் எல்லாராலும் கைவிடப்பட்டவள். என்பொருட்டு யாரும் மகிழ வேண்டாம் என் மக்களின் பாவங்களை முன்னிட்டு நான் தனிமையில் விடப்பட்டுள்ளேன். ஏனெனில் அவர்கள் கடவுளின் சட்டத்தைவிட்டு விலகிச் சென்றார்கள். என் மக்களே, வீறு கொள்வீர் கடவுளை நோக்கிக் கூக்குரலிடுவீர். இத்துயரங்களை உங்கள்மீது அனுப்பி வைத்தவர் உங்களை நினைவுகூர்வார். கடவுளைவிட்டு அகன்று செல்வதில் முன்பு நீங்கள் முனைந்து நின்றீர்கள். அதைவிடப் பன்மடங்கு ஆர்வத்துடன் அவரைத் தேடும் பொருட்டு இப்பொழுது அவரிடம் திரும்பி வாருங்கள். ஏனெனில், இக்கேடுகளை உங்கள் மீது வரச்செய்தவரே உங்களுக்கு முடிவில்லா மகிழ்ச்சியையும் மீட்பையும் அருள்வார்."

**பதில்பாடல் :** ஏழைகளின் விண்ணப்பத்திற்கு ஆண்டவர் செவி சாய்க்கின்றார்

## நற்செய்தி : லூக்கா 10 : 17 - 24

அக்காலத்தில் அனுப்பப்பட்ட எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் திரும்பிவந்து, "ஆண்டவரே, உமது பெயரைச் சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன" என்றனர். அதற்கு அவர், "வானத்திலிருந்து சாத்தான் மின்னலைப் போல விழக் கண்டேன்.பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆயினும் தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழவேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்" என்றார்.அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்" என்றார்."என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யாரென்று மகனுக்குத் தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும். வேறு எவரும் தந்தையை அறியார்" என்று கூறினார்.பின்பு அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக, "நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர். ஏனெனில் பல இறைவாக்கினர்களும் அரசர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண விரும்பினார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்று கூறினார்.

**தியானம் :** இயேசுவின் நற்செய்திப்பணியில் சீடர்களது அனுபவம் மகிழ்ச்சியைத் தருவதாக அமைகின்றன. அவ்வாறே நமது பணிவாழ்விலும் நாம் இறைவனின் அன்பையும், பிரசன்னத்தையும் ஏற்றுக்கொள்கின்றோமா? எமது விசுவாச வாழ்வின் அனுபவம் பற்றிச் சிந்திக்க இன்றைய இறைவார்த்தைகள் எம்மை அழைக்கின்றன. இன்றைய நற்செய்தியின் முதற்பகுதி கிறிஸ்துவின் சீடர்களாக விளங்குபவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அளப்பரிய ஆற்றல்கள் பற்றி தெளிவுபடுத்துகின்றது. அதாவது இந்த உலகின் தீய சக்திகள் மீது நமக்கு முழு அதிகாரம் அருட்சாதனங்கள் ஊடாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. தீயசக்திகளை அதற்கு எதிராக தூய ஆவியின் வல்லமை கொண்டு போராட அழைக்கப்பட்டிருக்கின்றோம். கண்டு பயப்படாமல் மட்டுமல்லாமல் ஆதிக்கம் செலுத்தவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் நமக்குள் இருக்கும் அப்படிப்பட்ட பேராற்றலை நாம் உணராததன் காரணத்தால் இவ்வுலக தீய சக்திகளை எண்ணி நாள்தோறும் செத்து மடிகின்றோம். திருமுழுக்கினால் இறைவனின் பிள்ளைகளாக( சீடர்களாக) அழைப்புப்பெற்ற நாம் தீய சக்திகளுக்கு இடம்கொடாது அவற்றை எதிர்த்து வெற்றி கொள்வோம். இறைபணியில் எமக்கு ஏற்படும் மகிழ்வும், திருப்தியும் எமது வளர்ச்சிக்கு துணைபுரியட்டும். எமது இதயங்களை எளிமையான விசுவாச வெளிப்பாட்டோடு திறந்த இறை அன்பை பெற்றுக்கொள்வோம். அப்போ எமது பெயர் விண்ணகத்தில் எழுதப்படுமல்லவா?. அதுதான் அன்பின் உச்ச வெளிப்பாடாகும். எனவேதான் நல்ல சமாரியனைப் போல நாமும் அடுத்திருப்பவர்களை அன்பு செய்து வாழும்பொழுது கடவுள் முன்னிலையில் நாமும் அவரது அன்பிற்கும், இரக்கத்திற்கும் உரிமையாளர்களாவோம்.